1973 மார்ச் 21]

## மரூர் அரிசனக் காலனிகளுக்கு மின்இணைப்பு

* 455. வின—திரு. ந. தருமலிங்கம்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மரூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிகளுக்கு இன்றுவரை மின் இணைப்பு வழங்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது மின் இணைப்பு வழங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) ஊராட்சி மன்றத்தின் தீர்மானமும், செல்நிலைச் சான்றிதழும் கிடைக்கப்பெற்றபின் மின் இணைப்பு வேலை பூர்த்தி செய்யப்படும்.

திரு. ந. தருமலிங்கம்: சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மரூர் காலனியில் 500-க்கு மேற்பட்ட அரிசனங்கள் வாழ்கிற காரணத்தால் அங்கே அரசியல் காரணமாக அங்கே வருகின்ற பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டுக் கொடுக்கமாட்டேன் என்று தகராறு செய்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசிலனை செய்து அரிசின் வேல்பேர் பண்டிலிருந்து செலவு செய்து மின் இணைப்புத் தர முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அரிசனங்கள் இருக்கும் பகுதிகளில் ஆகும் மின் செலவு அத்தனையும் நலத்துறைதான் ஒப்புக்கொள்கிறது. ஏறத்தாழ ரூ. 40 லட்சம் ரூ. 70 லட்சம் என்று ஒவ்வொரு ஆண்டும் மின்சார வாரியத்திற்குப் பணம் தருகிறோம். அதை நலத்துறைதான் ஏற்றுக்கொள்கிறது. அந்த கிராமத்தைப் பொறுத்தவரையில் பழைய மரூர், புதிய மரூர் என்று இரண்டு கிராமங்கள் இருக்கின்றன. பழைய மரூர் கிராமத்திற்கு மின் இணைப்புத் தரவேண்டுமென்று சொல்கிறபோது, புதிய மரூர் கிராமத்திற்கும் சேர்த்து ஒன்றாகத் தரவேண்டுமென்று கேட்டார்கள். பழைய மரூர் கிராமப் பஞ்சாயத்துதான் தீர்மானம் போட்டு அனுப்பியுள்ளது. புதிய கிராமத்திலிருந்து தீர்மானம் வரவில்லை. புதிய கிராமத்திலிருந்து தீர்மானம் வந்ததும் இணைப்புக் கொடுக்கப்படும் என்று மின்சார இலாகா செயலாளர் கூறியிருக்கிறார். உள்ளே இருக்கும் கோளாறு என்ன என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாமல் இருக்கமுடியாது. அந்தக் கோளாரை நீக்கி மன்றத் தலைவர் மூலமாகத் தீர்மானம் போட்டுக் கொடுத்தால் விரைவில் அந்தப் பணி முடிவுறும்.